முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 27.02.2026

O.S No. 88/2023

பி.வா.சா.1 பிரேமலதா

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

தானுமாலயம்புதுாரின் அமைவிடம் எனக்கு நன்கு தெரியயும். வாதியின் மரப்பட்டறை தானுமாலயம்புதுாரில் உள்ளது. தானுமாலயம்புதுாரானது நல்லூர் கிராம பஞ்சயத்திற்குட்பட்ட குக்கிராமம். 6ம் பிரதி சண்முகம் ஆசாரியை தவிர வேறு யாரும் எங்களுக்கு எழுத்து மூலமாக புகார் அளிக்கவில்லை என்றால் சரி. வழக்கு சொத்து பகுதியில் ஆசாரி சமுதாயத்தை சேர்ந்தவர்கள் உள்ளார்கள் என்றால் அனைத்து சமுதாயத்தை சேர்ந்தவர்களும் உள்ளனர். இரும்பு கொல்லப்பட்டறையும் உள்ளது. மரப்பட்டறை வழக்கு சொத்து பகுதியில் அதிகமாக உள்ளதென்றால் இல்லை குறைவாக உள்ளது வாதியின் மரப்பட்டறையை பார்த்துள்ளேன் மற்ற பகுதிகளில் நான் பார்த்ததில்லை. வழக்கு சொத்தில் மரப்பட்டறைக்கு முன்பு இரும்புகொல்லப்பட்டறை நடந்தது என்றால் எனக்கு தெரியாது.

வாதி அவரது மரப்பட்டறையில் 3 குதிரைதிறன் உள்ள மோட்டார் பயன்படுத்தி வருகிறார் என்றால் 3 குதிரைதிறன் உள்ள 3 மோட்டார்களை பயன்படுத்தி வருகிறார். 1 மிசின் மட்டுமே பயன்படுத்தி வருகிறார் என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மரப்பட்டறை தொழில் நடத்த தீயணைப்பு துறை, சுகாதார துறை, மாசுகட்டுப்பாட்டு வாரியம், 5 குதிரைதிறன் என்றால் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அனுமதி வாங்க வேண்டும். உண்மையில் 3 குதிரைதிறன் மிசின் பயன்படுத்த யாரிடமும் அனுமதி வாங்க வேண்டியது இல்லை என்றாலும் 5 குதிரைதிறன் மற்றும் அதற்கு மேல் பயன்படுத்தும் போது நான் சொல்லிய இடங்களில் அனுமதி வாங்கவேண்டும் என்றாலும் சரியல்ல.

மரப்பட்டறை தொழில் சிறுதொழில் என்றால் சரி. வா.சா.ஆ.3 மற்றும் 8 ன் படி சிறுதொழில் நடத்துவதற்கு மத்திய அரசின் மைக்ரோ தொழில் நுட்பத்தின் படி மத்திய அரசில் பதிவு செய்தாலே போதும் என்றால் சரியல்ல. தீயணைப்பு துறை, சுகாதார துறை, மாசுகட்டுப்பாட்டு வாரியம், மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வாதி மனு கொடுத்தபோது அனுமதி தேவை இல்லை என்று மனுவை திருப்பி அ னுப்பி விட்டோம் என்றால் சரியல்ல.

வாதியின் ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வா.சா,ஆ.3 மற்றும் 8 ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் தவறான நிருபண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நகராட்சி பேரூராட்சிகளில் பல மரப்பட்டறைகள் செயல்பட்டு வருகிறது என்றால் சரி. 6 ம் பிரதியின் தவறான புகாரின் அடிப்படையில் முறையான விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக வாதிக்கு எதிராக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கேரளாவில் உள்ள கோயில்களுக்கு 7 வருடமாக 6 ம் பிரதிக்கு கீழ் மரப்பட்டறை வேலை செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதி 6 ம் பிரதிவாதியிடம் இருந்து பிரிந்து தனியாக தொழில் தொடங்கியதால் வாதி மீது பொறாமை கொண்டு 6 ம்பிரதி புகார் கொடுத்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 6 ம் பிரதியின் தேவையில்லாத தொடர் புகார் மற்றும் பிரச்சனை காரணமாக நான் வாதி மீது நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3 குதிரைதிறன் கொண்ட மிசின்களை பயன்படுத்துவதால் சுற்றுசூழல் பாதிப்போ சுகாதார சீர்கேடோ எதுவும் ஏற்படாது என்றால் சரியல்ல. 4 ம் பிரதியிடம் வாதி அனுமதி கேட்டபோது அவர் அனுமதி தேவையில்லை என்று சொன்னதால் வாதி தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி அவரது குடும்பத்தையும் அவரது அண்ணன் குடும்பத்தையும் பாராமரிக்க வேறு வழியில்லாமல் மரப்பட்டறை தொழில் செய்கிறார்

என்றால் எனக்கு தெரியாது. வாதி பயன்படுத்தும் மிசின்களால் நான் சொல்வது போல் ஒளிமாசோ, தண்ணீர் மாசோ, காற்று மாசுபாடோ ஏற்படாதென்றால் சரியல்ல. வாதியும் வாதியின் சகோதரரும் 6ம் பிரதியின் கீழ்வேலை பார்க்க மறுத்து விட்டதால் பொய்புகார்களை 6ம் பிரதி கொடுக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. வாதி மற்றும் 6ம் பிரதியின் வீடுகள் அடுத்தடுத்து உள்ளதென்றால் வாதி வீடு மட்டுமே தெரியும் அந்த வீட்டிற்கு அருகில் உள்ள வீடு யாருடைய வீடு என்று எனக்கு தெரியாது.

வாதி அவரது குடும்பத்துடன் வழக்கு சொத்தின் முதல் மாடியில் வசித்து வருகிறார் என்றால் சரி. வழக்கு சொத்து அருகில் பொது மக்கள் வசித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதியினால் ஏற்பட்ட பிரச்சனைக்கு பிறகும் வாதி அரசு அலுவலரிடம் அனுமதி கேட்டபோது தேவையில்லை என்று திருப்பி அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் வாதியின் மனுவை பரிசீலிக்க முடியாதென்று திருப்பி அனுப்பி விட்டோம் என்றால் சரியல்ல. இறுதியாக உங்களுடன் முதல்வர் திட்டத்தில் அனுமதிகோரி மனு கொடுத்தபோது வழக்கு நிலுவையில் இருப்பதால் வாதியின் மனுவை பரிசீலிக்க முடியாதென்று திருப்பி அனுப்பி விட்டோம் என்றால் சரியல்ல. ரிட் மனுவை 6ம் பிரதி தாக்கல் செய்தார். அது நிலுவையில் உள்ளது இறுதி தீர்ப்பு இன்னும் வரவில்லை. அதில் வாதி ஆஜராகி வருகிறார் என்றால் சரி.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் வழக்கிற்கான அறிவிப்பை CPC 80 கீழ் அனுப்பியதற்கு உதவி இயக்குநர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் அனுப்பிய பதில் என்றால் சரி. அது **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 6 பிரதிகளுக்கும் CPC 80 ன் கீழ் வா.சா.ஆ.6 அறிவிப்பு அனுப்பபட்டதென்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11, ஒப்புதல் அட்டை 28.3.2023 ல் எங்கள் அலுவலகத்தால் பெறப்பட்டுள்ளதென்றால் சரி. 80 CPC படி

கடைபிடித்து தான் இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6, 27.03.2023 அன்று அனுப்பபட்டதென்றால் சரி. நல்லூர் கிராம பஞ்சாயத்தில் உரிய அனுமதி வரைபடம் பெற்று வாதி கட்டிடம் கட்டி வரி செலுத்தி வருகிறார் என்றால் சரி மரப்பட்டறைக்கு வாங்கவில்லை. கடைக்கும் வீட்டிற்கும் மட்டுமே வாங்கியுள்ளார். நல்லூர் பஞ்சாயத்தில் மரப்பட்டறைக்கு அனுமதி தேவையில்லை என்று வாதியின் மனுவை திருப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல.

வாதியின் ஜீவாதாரத்தை பாதிக்கும் வகையில் 6 ம் பிரதியின் சொல்படி நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் என் முதன்மை சாட்சியத்தில் உண்மைக்கு புறம்பாக பல தகவல்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 26.6.2022 அன்று மரப்பட்டறை காலி செய்வதாக வாதி சுகாதார துறையில் கடிதத்தின் மூலம் வாக்குறுதி கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 3 குதிரைதிறன் கொண்ட மிசின் பயன்படுத்த வாதி அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி வருகிறார் என்றால் சரியல்ல. சுற்றுசூழல் பொறியாளர் வாதிக்கு எதிராக எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையை காரணம் காட்டி நானும் அரசு அலுவலர்களும் வாதியின் உரிமையை பறித்து வருகிறோம் என்றால் சரியல்ல.

6 ம் பிரதியின் தவறான கூற்றுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.